பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 15 (28—5—68) செவ்வாய் ★ வெளியூர்: வைகாசி 16 (29—5—68) புதன் [இதழ்: 288

விரைவில் அறிவிப்பு

சென்னை, மே 28—

தமிழக அரசு ஊழியர்களின் கிராக்கிப் படியை மேலும் உயர்த்தும் பிரச்சினை இப்பொழுது அரசின் தீவிர ஆலோசனையில் இருந்து வருகிறது; இது சம்பந்தமான அறிவிப்பு விரைவில் வரும்.

"மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப் படி அண்மையில் உயர்த்தப்பட்டதிலிருந்து அதற்குச் சமமாகத் தங்களுடைய கிராக்கிப் படியையும் உயர்த்தித் தர வேண்டும்"

என்று தமிழக அரசு ஊழியர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

அறிஞர் அண்ணா முயற்சி வெற்றி

வேலை நிறுத்தத்தைக் கைவிட்டுவிட தொழிலாளர் பிரதிநிதிகள் முடிவு

அவசர அழைப்பை ஏற்று வந்து அண்ணாவுடன் பேச்சு நடத்தினர்

ஆறு அம்ச ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று

சென்னை, மே 28—

நேற்றிரவு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் பேசிய தன் பலனாக, கோவைப் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

கோவை நிலவரம் பற்றிப் பேச்சு நடத்த சென்னைக்கு வருமாறு தொழிற் சங்கத் தலைவர்களுக்கு முதலமைச்சர் அண்ணா அழைப்பு அனுப்பியிருந்தார்; அதற்கேற்ப, 9 தொழிற் சங்கத் தலைவர்கள் நேற்று அவசரமாகக் கார் மூலம் சென்னை வந்து சேர்ந்தனர். அண்ணா அவர்களின் இல்லத்தில் இரவு 11-மணிக்குப் பேச்சுத் துவங்கியது.

மூடப்பட்டுள்ள நூற்பாலைகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி விரிவாக விவாதம் நடத்தப்பட்டது; இரவு 2 மணி வரை விவாதம் தொடர்ந்து நடந்தது.

அதுபோது, ஆறு அம்ச ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது; அதற்கேற்பத் தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதெனத் தீர்மானித்தனர்.

பேச்சுவார்த்தைகளின்போது அண்ணா அவர்களுடன் தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி, இரா. செழியன் எம்.பி. ஆகியோர் இருந்தனர்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டோர்:—

ஏ. சுப்பிரமணியம் (எச். எம். எஸ்.)

கே. என். குமாரசாமி எம் எல ஏ. (எச்.எம்.எஸ்.)

கே. எம். சுந்தரம் (ஏ.ஐ.டி.யூ.சி—வலது)

பி. கே. இராமசாமி (ஏ.ஐ.டி.யூ.சி.—வலது.)

எம். பூபதி எம் எல்.ஏ. (ஏ.ஐ.டி.யூ.சி.—மார்க்சிஸ்டு.)

கே. ரமணி (ஏ.ஐ.டி.யூ.சி.—மார்க்சிஸ்டு.)

என். கண்ணன் குட்டி (தமிழக ஆலைத் தொழிலாளர் சங்கம்.)

என். இராமகிருஷ்ணன் (கோவை மாவட்ட என். ஜி. ஆர். தொழிலாளர் சங்கம்.)

எஸ். கிருஷ்ணமாச்சாரி (சுதந்திரா தொழிற் சங்கம்)

ஒப்பந்த விவரம்

முதலமைச்சர் அண்ணா அவர்கள், தொழிலாளர் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாகப் பின்வரும் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது:—

[1]

தொழில் வளர்ச்சி — ஒழுங்கு முறைச் சட்டப்படி ஆய்வுக் குழுவின் விசாரணை நடைபெறும்போது, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

மூடப்பட்ட ஆலைகள் பற்றி ஆய்வுக் குழு எடுத்துக்கொள்கிற வரிசை பற்றித் தொழிற் சங்கப் பிரதிநிதிகட்குத் தமிழக அரசு அறிவிக்கும்.

மூடப்பட்ட ஒவ்வொரு ஆலை பற்றிய ஆய்வும் முடிவடைந்தவுடன் அதுபற்றிய அறிக்கையை ஆய்வுக் குழு தயாரித்து அளிக்கும்.

[2]

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஆய்வுக் குழு, 6 ஆலைகளைப் பற்றியதாகையால், மூடியுள்ள 15 ஆலைகள் பற்றிய இரண்டாவது ஆய்வுக் குழு ஏழு நாட்களில் நியமிக்கப்பட வேண்டும் என்றும், அக்குழு நியமனம் அரசிதழில் அறிவிக்கப்பட்ட பின் இரண்டு வார காலத்தில் விசாரணை தொடங்க வேண்டும் என்றும், அதிலிருந்து இரண்டு வார காலத்துக்குள் ஆலையின் விசாரணை முடிந்து அறிக்கை வழங்கவேண்டும் என்றும், 'அரசு ஏற்று நடத்தலாம்' என்று சிபாரிசு செய்யப்படுகிற ஆலைகட்கு நிர்வாக அதிகாரிகள்—அறிக்கை வந்த மூன்று வார காலத்துக்குள்—நியமிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தும்.

[3]

தொழில் வளர்ச்சி — ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி, ஆய்வுக் குழு, 'அரசு ஏற்று நடத்தக்கூடாது' என்று அறிக்கையில் குறிப்பிட்ட ஆலைகள் நிலை பற்றித் தொழிலாளர் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, தமிழக அரசு, பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு வேலைகிடைக்க தக்க நடவடிக்கை எடுக்கும்.

[4]

தற்போ[illegible] ஓடிக்கொண்டிருக்கும் [illegible]களின் தொழிலாளர் சம்பளமும், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பாக்கித் தொகைகளும் கொடுக்கவேண்டியிருப்பதைக் கிடைக்கச் செய்யத் தமிழக அரசு தலையிட்டு ஜூன் இறுதிக்குள் ஆலை அதிபர்கள்-தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசித் தக்க நடவடிக்கை எடுக்கும்.

[5]

ஓடிக்கொண்டிருக்கும் ஆலைகளின் உரிமையாளர்கள் சிலர், பிராவிடண்ட் நிதி—ஈ. எஸ் ஐ.— எல். ஐ. சி. முதலிய பணத்தைக் கட்டாமல் கைவசம் வைத்திருப்பதால் தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் இருப்பதற்குத் தக்க வழி வகை காண்பதற்கு ஆலை உரிமையாளர்கள்—தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோருடன் அரசு விரைவில் கலந்து பேசும்.

[6]

மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்படும்வரை, அந்த ஆலைத் தொழிலாளர்கட்கு நிர்வாகிகள் செலுத்திய பிராவிடண்ட் நிதிச் சந்தாத் தொகையிலிருந்து மாதந்தோறும் ரூ. 100 அளவுக்கு முன் பணம் கிடைக்க வகை செய்யும்படி மத்திய அரசினை தமிழக அரசு வற்புறுத்தும்.

மொழிப் பிரச்சினையில்..

'முடிவுகட்டும் பொறுப்பு நமக்கு வேண்டாம்'

'அடுத்த தலைமுறையினருக்கே இதனை விட்டுவிடலாம்'

பூனா பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆய்வுரை

பூனா, மே 28—

"சட்டத்தின்மூலம் ஒரு மொழியை மாற்றுவதோ அல்லது பெரும்பான்மை பலத்தின்மூலம் மற்றொரு மொழியை மக்கள்மீது சுமத்துவதோ அபாயகரமானது; அசாத்தியமானது; 'நாம் அடக்கப்படுகிறோம்' என்ற உணர்ச்சியே அதுபோது அந்த மக்களிடம் உருவாகும்; இதனால் பிளவு--மோதல் ஏற்படும்.

"சட்டம் செய்துவிட்டால், அதில் மாற்றம் செய்வதென்பது ஒரு கவுரவப் பிரச்சினையாகிவிடுகிறது; இத்தகைய சூழ்நிலையில் மொழிப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பது கடினமாகி விடுகிறது.

"ஏற்படுகின்ற அனுபவங்களைக்கொண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை அடுத்த தலைமுறையினரிடம் விட்டுவிட வேண்டும்; அதுவரையில், நிலைமை மோசமாகிவிடாதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்"

என்று, பூனா பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றுகையில், துணைவேந்தர் எச். வி. படாஸ்கர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இன்றைய மொழிப் பிரச்சினை, அரசியல் தவறுகளால் ஏற்பட்ட ஒன்று.

"வரலாற்றுக் காரணங்களினால் நமது நாட்டில் பல மொழிகள் இருக்கின்றன; இவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றால், அது, மக்களின் தேவைகளையும், வசதிகளையும் பொறுத்துத்தான் ஏற்பட்டதாகும். எனவே பழைய ஏற்பாடுகளை மாற்றுவதோ, ஒரு குறிப்பிட்ட மொழியைத் திணிப்பதோ ஆபத்தானதாகும்."

(1-ம் பத்தி தொடர்ச்சி)

வெள்ளை அறிக்கைமீது விரிவான விவாதம் நடத்தியபிறகு, மேற்கண்டவாறு பரிந்துரைக்கும் முடிவினை மாநாடு மேற்கொண்டது.

துணிகட்கான விற்பனை வரி ரத்தாகும்?

ஆலை நெருக்கடியைத் தணிக்கத் தமிழக அரசு காட்டும் சலுகை

மத்திய வரியை நீக்கவும் முயற்சி

மதுரை, மே 27—

"துணிகள் மீதான விற்பனை வரியை நீக்கிவிடவும், நெருக்கடிக்குள்ளாகியுள்ள நூற்பாலைகளின் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்கவும் அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. கருமுத்து தியாகராச செட்டியாரிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

"இதுபற்றித் தமிழக அரசு விரைவில் ஒரு முடிவுக்கு வரும்" என்று திரு. கருமுத்து தியாகராசன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

துணிகள் மீதான சுங்க வரிகளை நீக்குவதுபற்றியும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் மத்திய அரசிடம் கலந்துபேசி வருவதாகத் தெரியவருகிறது.

"துணிகள் மீதான விற்பனை வரியை நீக்குவதன் மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 2 கோடிக்கு மேல் இழப்பு ஏற்படும்; மின்சாரக் கட்டணங்களைக் குறைப்பதன்மூலம் ஆண்டுக்கு ரூ. 1 கோடிவரை இழப்பு ஏற்படும்"

என்றும், திரு கருமுத்து தியாகராசன் தெரிவித்தார்.

கட்டாய ஆங்கிலக் கல்வி

பம்பாய், மே 28—

"மாநிலம் முழுவதிலும் ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்[illegible]"

[illegible]ட்டிர மாநிலக் கல்வித் [illegible]காரிகள் மாநாட்டில் ஒருமன[illegible]கப் பரிந்துரைக்கப்பட்டது.

அண்மையில் கல்வி சம்பந்தமாக மாநில அரசு வெளியிட்ட

(5-ம் பத்தி பார்க்க)

சிலப்பதிகார காலத்து இந்திர விழா

பூம்புகாரில் மீண்டும் தொடங்கும்

தமிழக அரசின் சார்பில் அமைச்சர் கருணாநிதி அறிவிப்பு

"இந்த விழா வெறும் இலக்கிய விழாவாக மட்டும் இருத்தல்கூடாது; அடுத்த ஆண்டிலிருந்து தமிழக அரசின் ஒத்துழைப்புடன் காலை முதல் மாலை வரை பூம்புகார் கடற்கரையில் நல்ல களியாட்டங்களிலும் ஆடல் பாடல்களிலும் ஈடுபட்டு—சமைத்து உண்டு — ஆணும் பெண்ணும் மகிழ வேண்டும்.

"சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழாவைப்போல், இது நடைபெற வேண்டும். 'நல்ல முறையில் இது நடைபெறத் தமிழக அரசின் ஆதரவு உண்டு' என்று தமிழக அரசின் சார்பில் உறுதி கூறுகிறேன்"

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், பூம்புகாரில் நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டு முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டு, பூம்புகார் கலைக்கூடக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பூம்புகார் கலைக்கூடம், உலகத் தமிழ் மாநாட்டு நிதியிலிருந்து ரூ. 1-இலட்சம் செலவில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலைக்கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ரங்கபாஷ்யம் தலைமையில்—குன்றக்குடி அடிகளார் முன்னிலையில் நடைபெற்றது.

பூம்புகார்க் கடற்கரையில் நடைபெற்ற இவ்விழாவில், அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், கால்கோள்விழா ஆற்றிப் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"இக்கலைக் கூடத்தில் பழைய பூம்புகார் நகரின் சிறப்பைக் கண்முன் கொணரும் வகையில் சிற்ப வேலைப்பாடுகள் செய்யப்படும்.

வெளிநாட்டார் வந்து பார்த்தால், சிலப்பதிகாரத்தின் சிறப்பைத் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் இது இருக்கும்.

கடந்த சில ஆண்டுகளாகத்தான், 'கண்ணகி' என்ற பெயரைத் திருத்தமாக மக்கள் கூறுகிறர்கள்.

முன்பு, 'கர்ணகி' என்றுதான் தவருக அழைப்பார்கள்.

கண்ணகியாக நடிப்பவர்கள் காளி உருவில் வேடம் போட்டுக் கொண்டு வந்து சிலப்பதிகாரத்தை அலங்கோலப்படுத்தினர்கள்!

தமிழுக்கும், திருக்குறளுக்கும் ஏற்றம் வருவதற்கு, அரசியல் துறையில் உள்ளவர்கள் இலக்கியத் துறையில் ஈடுபட்டார்கள். அவர்களது தொண்டினால் மக்கள் மனதில் சிலப்பதிகாரம் தெளிவு பெற்றது!

என்ன செலவு ஏற்பட்டாலும்—பழைய பூம்புகார் நினைவில் நிற்கும் அளவில்—பூம்புகாரை உருவாக்க வேண்டும்."

இவ்விழாவில் குன்றக்குடி அடிகளார், தஞ்சை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் மன்னை ப. நாராயணசாமி, நாடாளுமன்ற கழக உறுப்பினர் சுப்ரவேல், சட்டமன்ற உறுப்பினர் கணேசன் ஆகியோரும் பேசினர்.

நிதி திரட்டும் பணியில் அரசு ஊழியர்கள் ஈடுபடக்கூடாது

விதியைச் சுட்டிக்காட்டி

அரசு சுற்றறிக்கை

வேலூர், மே 27—

அரசு ஊழியர் ஒழுங்கு முறை விதியின்கீழ் அரசின் முன் அனுமதியின்றி அரசு ஊழியர்கள் நிதி திரட்டுவதோ, நிதி திரட்டுவதற்கான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்வதோ கூடாது; அல்லது அத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதோ கூடாது என்பதை, நினைவுபடுத்தும் வகையில் தமிழக அரசு, சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இந்த விதியை ஊழியர்களுக்கு எடுத்துக் கூறுமாறு அரசுத் துறைத் தலைமை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

எத்தகைய நல்ல காரியத்துக்காக இருந்தபோதிலும், அதற்கு நிதி திரட்டும் முயற்சியில் அரசு ஊழியர்கள் பங்குகொள்ளக் கூடாது என்று அரசு ஊழியர்களுக்கான 6-வது ஒழுங்கு விதி கூறுகிறது.

விரைந்து பயிர்கள் வளரப் 'புதிய வழி'

கலிபோர்னிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், மே 24—

பொதுவான உணவுப் பயிர்கள் உள்பட செடி கொடிகள் அனைத்தையுமே இரு மடங்கு வேகத்தில் வளரச் செய்வதற்கு விஞ்ஞானிகள், வியப்பூட்டும் ஓர் எளிய வழியைக் கண்டுபிடித்துள்ளனர்.

செடி கொடிகளைச் சுற்றிலுமுள்ள வாயு மண்டலத்தில் இருக்கும் பிராணவாயு (ஆக்சிஜன்) அளவைக் குறைப்பதன்மூலம் அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர்.

புதிய கண்டுபிடிப்பினுல் உணவுப் பற்றுக்குறை நாடுகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் அளவிட முடியாதவை.

கலிபோர்னியா மாநிலத்தில், ஸ்டான்ஃபோர்டு நகரில் கார்னகி கழகத்திலுள்ள விஞ்ஞானிகள் குழு ஒன்று புதிய வழியைக் கண்டுபிடித்துள்ளது.

நில மட்டத்தில் காற்றில் சராசரி 21 சதவீதம் (ஐந்தில் ஒரு பங்கு) ஆக்சிஜன் உண்டு. டாக்டர் ஜார்க்மன் என்பவர் நடத்திய சோதனைகளில், பயிர்களைச் சுற்றிலுமுள்ள பிராண வாயுவின் அளவு 5 சதவீதம் (20-ல் ஒரு பங்கு), 2½ சதவீதம் ஆகிய அளவுகளுக்குக் குறைக்கப்பட்டது. வேர்களுக்கு வழக்கமான காற்று கிடைத்தது.

சோதனைகளில் அவரை நாற்றுக்கள் இரு மடங்குக்குமேல் வேகமாக வளர்ந்தன. 5 சதவீத ஆக்சிஜன் சூழ்நிலையில் ஆறு நாட்களில் கபிலை மலர்களின் எடை 90 சதவீதம் அதிகமாயிற்று.

சோளத்தை வைத்து நடத்திய சோதனைகளில் வளர்ச்சி முறையில் குறிப்பிடத்தக்க கால வேற்றுமை இருந்ததாகக் கழகம் தெரிவித்தது; '5 சதவீதம் ஆக்சிஜன் சூழ்நிலையில் வளர்ந்த சோளத்தின் வளர்ச்சி வேகம் 16 சதவீதம்தான் அதிகரித்தது' என்று அது கூறியது; அதாவது, வெளியில் அது சாதாரணமாக வளரும் காலத்தில் கிட்டத்தட்ட ஆறில் ஒரு பங்குதான் குறைந்தது.

'அரிசி'யல்!

[எஸ். ஆர்.]

அறுபத்தேழின் அரசியல் நுழைவு வாயிலாக இருந்த கழகப் பொது மாநாட்டின்போது 'அரிசி'யல் என்ற இதே தலைப்பில் 'நம் நாடு' இதழில் கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது.

அதற்குப் பின் இப்போது நிலைமைகள் நேர்மாற்றம்; கழகமும் காங்கிரசும் தமிழக அரசியலில் எதிரெதிர் வரிசைக்கு வந்திருக்கின்றன!

ஆனாலும், கழகம் எதிர்த் தரப்பு வரிசையில் இருந்தபோது பயன்பட்ட அதே கட்டுரைத் தலைப்பு, இப்போது எதிர்த் தரப்பில் உள்ள காங்கிரசின் அரசியல் நிலைமைகளை விளக்கிச் சொல்லுவதற்குப் பொருந்தி வருவது வியப்பல்ல; பொருத்தத்தின் வலிவினைத்தான் அது காட்டுகிறது!

குற்றாலத்தில் கூடிக் கலந்திருக்கும் இளைஞர் காங்கிரசுக்காரர்கள், வரும் ஆகஸ்டு முதல் தேதியன்று படி அரிசி கேட்டுத் **தமிழகம் முழுவதிலும்** போராட்டம் நடத்தப்போகிறர்கள் என்று செய்தியொன்று வெளியாகியிருக்கிறது.

தமிழகத்தில் காங்கிரசுக்காரர்கள் பெற்றிருக்கும் அரசியல் மாற்றத்துக்கு, 1965—67 வரை இங்கு இருந்த 'அரிசி நிலைமை'யும் ஒரு காரணம்!

அவர்களைப் பதவியிலிருந்து அகற்றியிருக்கும் 'அரிசி'யை வைத்துக்கொண்டு, 'மீண்டும் பதவிக்கு வரமுடியுமா' என்று பார்த்த முயற்சி தோல்வியடையவே, "சரி, அரசியலாவது இந்த 'அரிசி'யைக் கொண்டு நடக்கட்டும்" என்ற முடிவுக்கு வந்திருக்கிறது—முதியவர்களைக் கொண்ட இளைஞர் காங்கிரசு!

'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்ற பாரம்பரியத்தில் வளர்ந்த காங்கிரசு, இப்போது 'அரிசி'யை வைத்து அரசியலில் பிழைக்கும் நிலைமைக்கு வந்திருப்பது, சரித்திரத்தின் ஒரு சோக சம்பவம்தான்!

பெயர்தான் 'இளைஞர் காங்கிரசே' தவிர, 'விவரம் புரியாத சிறுவர்கள் எவரும் அந்த அமைப்பில் இருக்கமாட்டார்கள்' என்ற நம்பிக்கையில், சில விளக்கங்களை அவர்களது கருத்துக்கு வைப்போம்:—

'தேவை'கள் முடிவு இல்லாதது; திரும்பவும் வரக்கூடியது' என்பது—(Wants are Unlimited and Recur) -பொருளாதாரத்தில் ஓர் அடிப்படைப் பாடம்!

'எதுவுமே இல்லை' என்ற நிலையில், 'ரூபாய்க்குப் படி அரிசி என்பது', பாலைவனச் சோலையைப் போல்!

எல்லா வளங்களும் கொழிக்கும் நாட்களில், 'ரூபாய்க்கு மூன்று படியாமே' என்ருல், 'இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது' என்பார்கள்!

'வங்காளத்துப் பஞ்சம்' இருந்த நாட்களில், 'அரிசி' என்ற தானியத்துக்கு இருந்த விலை, உயிருக்கு இணை!

எனவே, 'படி அரிசி' என்பது, ஆணி அடிக்கப்பட்ட ஒரு பொருளாதாரப் புள்ளிவிவரம்—என்று காங்கிரசுக்காரர்கள் எவராவது நம்பிக்கொண்டிருந்தால், முதலில் அவர், அந்த தவறைக் களைந்துகொள்வது அவசியம்.

அடுத்ததாக, படி அரிசி என்பது, ஏதோ, 'கழகத்தின் அரசியல் கொள்கை' என்ற நினைப்பு இருப்பதாகத் தெரிகிறது.

'படி அரிசி' என்பது, ஓர் இக்கட்டான நிலைமையினைச் சரிசெய்ய அ[illegible]க்கப்பட்ட திட்டம்!

பிரச்சினைகளைச் சமாளி[illegible]தற்குத் தெரிவிக்கப்படும் தற்காலிக நடவடிக்கை, 'ஓர் அரசியல் கட்சியின் பொருளாதாரக் கொள்கை' என்று நினைப்பது தவறு; ஏனெனில், பிரச்சினை சமாளிக்கப்பட்டவுடன், அந்தத் திட்டமே தேவையில்லாது போய்விடுகிறது; அல்லது, [illegible]ரச்சினை மேலும் சற்று கடினமானுல், அதற்கேற்றவாறு திட்டத்தை மாற்றவேண்டிய அவசியமும் பிறக்கிறது!

உற்பத்தி குறைவு — வினியோக முறையில் குறைகள் என்ற இரண்டு காரணங்களினுல், அந்த இரண்டாண்டுக் காலம் தமிழகம், வங்காளத்தும் பஞ்சத்தை மீண்டும் மீண்டும் நினைவூட்டிக்கொண்டிருக்கவேண்டிய நிலையில் இருந்தது!

அடுத்துவந்த தேர்தலில், அந்த 'அரிசி நிலை'மையும், ஓர் அரசியல் பிரச்சினையாக உருவெடுத்தது!

மாற்றத்தைக் கொடுத்த தேர்தல் முடிவினை, இரண்டு வகையாகப் பிரிகலாம்:—

1. கழகத்துக்கு ஆதரவாக விழுந்த வாக்குகள்
2. காங்கிரசுக்கு எதிராக விழுந்த வாக்குகள்

இதில், அரிசி நிலைமை காரணமாக அளிக்கப்பட்ட வாக்குகள் இரண்டாவது வகையில் அடங்கும்!

1965—67-ம் ஆண்டுக் காலத்தின்போது தமிழகத்தில் இருந்த அரிசி நிலைமை — அந்த அவல நிலை — இப்போது இருக்கிறதா என்பதனைக் காங்கிரசுக்காரர்கள்—சற்று நேரம் அரசியலை மறந்து—தங்கள் இதயங்களை மட்டும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது தட்டுப்பாடு குறைந்துள்ளது—வினியோகம் சீர்பட்டுள்ளது!

ஆனுல், 'அரிசி நிலைமை' காரணமாக எதிரான வாக்குகளைப் பெற்ற காங்கிரசு, இப்போது போராட்டம் நடத்தப் புறப்பட்டிருக்கிறது!

அப்படியானுல்,

போராட்டம் யாருக்காக—

அரசியலுக்காக!

'படி அரிசி' பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள், கடந்த சட்டமன்றக் கூட்டத்தில்கூட, ஓர் இறுதியான விளக்கம் தந்தார்கள்.

அதற்குப் பின்பும், 'படி அரிசி'யை அவர்கள் விடுவதாயில்லை! 'அரிசி' அவர்களை என்றோ விட்டுவிட்டது! இவர்கள் மட்டும், 'படி, படி' என்று பிடித்துக்கொண்டிருக்கிறர்கள்!

படி அரிசியினை, கழக அரசு அளந்து கொண்டிருக்கிறது!

ஆனுல் காங்கிரசுக்காரர்கள், 'படி அரிசி'யை வைத்து அரசியலை அளந்துகொண்டிருக்கிறர்கள்!

படி அரிசித் திட்டம்', அளவு முறை அமுலில், உள்ள நகரங்களுக்கு மட்டுந்தான்!

தமிழகத்தில் பெரும் பகுதியினர், வாங்கிச் சாப்பிடும் வகையைச் சேர்ந்தவர்கள்!

வாங்கிச் சாப்பிடுபவர்களும் இரண்டு வகையினராக இருக்கிறர்கள்; ஒருவகையினர்—நகர்ப்புறங்களில் இருப்போர்! மற்றொரு வகையினர் கிராமங்களில் வசிப்போர்!

நகர்ப்புறங்களில் வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் கிராமப்புறங்களில் வாங்கிச் சாப்பிடும் மக்களுக்கு இல்லை!

அளவுமுறை நகர்ப்புறங்களுக்கு மட்டும் இருப்பதற்கான எளிய விளக்கம் இது!

படி அரிசி கொடுப்பதனுல் சாதகம் மட்டும் இருப்பதாக நினைத்துவிடக் கூடாது; ஏனெனில், அது உழவர்களுக்கு—நெல்லை உற்பத்தி செய்பவர்களுக்குப் பாதகமில்லாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டிய நிலையும் இருக்கிறது.

'படி அரிசி' என்பதால், 'கொள்முதல் விலை குறைந்துவிடக் கூடாது' என்ற நிலைமை வரும் போதுதான், 'அரசின் நிதி ஒதுக்கீடு' என்ற பிரச்சினையும் எழுகிறது!

படி அரிசித் திட்டம், இப்போது உள்ள பகுதிகளுக்கும் மேலாக மேற்கொண்டு ஏன் விரிவுபடுத்தப்படவில்லை என்பதற்குச் சட்டமன்றத்திலும், பொது நிகழ்ச்சிகளிலும், தமிழக முதலமைச்சர், அதிகாரபூர்வமான விளக்கம் கொடுத்திருக்கிறர்.

இடையில் அரிசியின் நிலை — உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக — இயற்கையிலேயே சீரடைந்துவிட்டது!

"சாதாரண நிலையில் தாராளமாக — தரத்துடன் கிடைக்கிறது என்ருல், படி அரிசித் திட்டத்தினை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கும் அளவுக்கு விவரம் புரியாதவனல்லன் நான்" என்ற ஒரு பதில், ஏற்கனவே முதலமைச்சரால் தரப்பட்டிருப்பதனை இங்கே மீண்டும் நினைவூட்டுகிறேம்.

'ஜெகஜீவன்ராமுக்கு விவசாயம் பற்றி என்ன தெரியும்?' என்று பொதுமேடையில் சவால் விடும் கருத்திருமன் போன்ற விவசாய நிபுணர்களைக் கொண்ட காங்கிரசுக் கட்சியினைச் சேர்ந்தவர்கள்—

★ மத்திய அரசு, 'மானிய உதவி[illegible] [illegible]' என்று அறிவித்த நிலையில்—

★ மதுவிலக்கைத் தளர்த்தினுல் நி[illegible] [illegible]குமே' என்ற மறைமுகத் தூண்[illegible] [illegible] ஆளாகாத நிலையில்—

★ கொள்முதல் விலையினைக் குறைக்காமலே,

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

'புதுவைப் பகுதிகளை அண்டை மாநிலத்துடன் இணைக்க வேண்டும்'

'இந்தியாவுடன் இணைந்துவிட்ட பிறகும் பிரெஞ்சுச் சட்டங்கள் ஏன்?'

நாடாளுமன்ற மேலவையில் தில்லை வில்லாளன் பேச்சு

நாடாளுமன்ற மேலவையில், புதுவை சட்ட நீடிப்புப் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரை வருமாறு:—

"புதுவை சட்ட நீடிப்புச் சட்டத்தை ஆதரிக்கிறேன்; சில யோசனைகளை மட்டும் இணைக்க விழைகிறேன்.

புதுவை, காரைக்கால், ஏனாம், மாகி ஆகியவைகளைக் கொண்டதுதான் புதுவை மாநிலமாகும்.

புதுவை மாநிலத்தின் நில அமைப்பையும், மக்களின் மன நிலையையும் நான் நன்கு அறிந்தவன். அங்கே ஒரு சிற்றூர் புதுவை மாநிலத்தைச் சேர்ந்ததாக இருக்கும்; அடுத்த சிற்றூர் தமிழகத்தைச் சார்ந்ததாக இருக்கும்.

தந்தை ஒரு சிற்றூரிலும் மகன் மற்றோர் ஊரிலும் வாழலாம். தந்தை—புதுவைச் சட்டத்தையும், மகன்—தமிழகச் சட்டத்தையும் அனுசரிக்கலாம்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தந்தை பாகம் கேட்டு வழக்குப்போட வேண்டுமானால் பிரெஞ்சுச் சட்ட முறையையும், மகன் தமிழகச் சட்ட முறையையும் பின்பற்ற வேண்டும்.

பிரெஞ்சு நாட்டிடமிருந்து உண்மை நிலை அதிகார மாற்றம் ஏற்பட்ட பிறகு, இது போன்றதோர் குழப்ப நிலை இருந்துவந்தது.

புதுவை மாநிலத்தைப் பொறுத்து 1962-ல் சட்டபூர்வமான அதிகார மாற்றமும், 1954-ல் உண்மை நிலை அதிகார மாற்றமும்—ஆக இருமுறை ஏற்பட்டன.

1954-ம் ஆண்டிலிருந்தே அந்தப் பகுதி மக்கள், தமிழகத்தின் சட்டங்களை—பழக்க வழக்கங்களை மெல்ல மெல்ல ஏற்கத்தொடங்கினர். ஆனால், 1962-ம் ஆண்டு வரை—சட்ட பூர்வ அதிகார மாற்றம் ஏற்படும் வரையில் எந்தவிதமான சட்ட பூர்வமான ஒப்புதலும் பெறவில்லை.

ஒரே குடும்பத்திலேயே குழப்பம் இருந்து வந்தது; புதுவைக்கும்—தென்னாற்காடு மாவட்டத்திற்கும் அதிக வேற்றுமை இல்லை; அதிகார எல்லைக்கோடு மட்டுமே இடையிலே இருந்தது. இரு பகுதிகளுக்கும் வேறு எவ்வித வேறுபாடும் கிடையாது.

இக் குழப்பத்தைத் தீர்க்க, 'எல்லாவிதச் சிவில் சட்டங்களும் புதுவைக்கும் நீட்டப்பட வேண்டும்' என்ற கோரிக்கை, புதுவை மக்களிடையே இருந்து வந்தது. இக் கோரிக்கையில் ஆளுங்கட்சி — எதிர்க் கட்சி இரண்டும் இணைந்திருந்தன; இணைந்தே சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றின. மாநாடுகளிலும் கூட்டங்களிலும்கூட அவர்கள், கோரிக்கை எழுப்பினர். கி.பி.கோ. பிரிவு நீட்டப்பட்டது.

அதிகார மாற்றத்தின்பொழுது அடிப்படையான சட்டம்—அரசியல் சட்டம் செயல்படுத்தப்பட்டது. தாய்ச் சட்டம் நீட்டப்பட்டபிறகு, அதன் கிளைச் சட்டங்களை நிறுத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை.

ஆகவே, அரசியல் சட்டம்—கிரிமினல் புரசீசர் சட்டம்—இந்தியன் பீனல்கோடு சட்டம் ஆகியவை செயல்படுத்தப்பட்ட பிறகு, மற்ற சட்டங்களை நிறுத்தி வைப்பதில் அர்த்தமில்லை.

[illegible] றவானவர்கள்— [illegible] சிலரால் மட் [illegible] எதிர்ப்புத் தெரி [illegible] றது. அந்த ஒரு சில [illegible] ஞர்களும் உண்டு; அ[illegible], 'ஆங்கிலம் வேண்டியதில்லை; பிரெஞ்சு போதும்' என்கிறார்கள்.

'அதிகாரமாற்ற ஒப்பந்தம்' என்ற ஒன்று இருக்கிறது; அதற்குப் பிரெஞ்சு மொழியில், 'பெர்லா' என்று பெயர். அதன்படி, அதிகார மாற்றம் மெதுவாகவும் படிப்படியாகவும் அதிக கால மாற்றத்தோடும் நடைபெற வேண்டுமென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்கள் — வழக்கறிஞர்கள் — சட்டத்தை எரித்தார்கள்; சென்னை உயர் நீதிமன்றம்வரையிலும் சென்றனர்; சுயநலம் கொண்ட ஒரு சிலர் மட்டுமே எதிர்த்தனர்; 'இந்தச் சட்டங்களைப் புதுவைக்கும் அமுல் செய்துவிட்டால், வெளியிடங்களிலிருந்தெல்லாம் இங்கு வழக்கறிஞர்கள் வந்துவிடுவர்; அப்படி வந்தால் நம்முடைய தொழிலும் வருவாயும் கெட்டுவிடும்' என்பது அவர்களுடைய எண்ணமாகும். இதுவே தவிர, புதுவையில் வேறு எதிர்ப்பு இல்லை.

முறை பற்றிய சட்டம் செயற்படுத்தப்பட்ட பிறகு அம்முறையை ஒட்டிய பொதுச் சட்டத்தை நிறுத்திவைப்பதில் அர்த்தமில்லை.

கிரிமினல் புரசீசர் சட்டம், முறை பற்றியது; சொத்துப் பரிமாற்றச் சட்டம், ஒப்பந்த சட்டம் போன்ற 96 சட்டங்கள் பொதுச் சட்டங்கள்.

இந்தச் சட்ட நீடிப்புக்குப் புதுவை மக்களிடம் பெரும் ஆதரவு இருக்கிறது; 'எதிர்ப்பு' என்று சொல்லத் தக்கது எதுவும் இல்லை.

அதிகார மாற்றத்தைப் பொறுத்துச் சொல்லக்கூடியது, 'எல்லாச் சட்டங்களும் ஆங்கிலத்தில் இருக்கின்றன' என்ற ஒன்றுதான்!

புதுவையில் சட்டமன்றங்களிலும் பிற இடங்களிலும் பயன்படுத்தப்படுவது பிரெஞ்சு மொழி ஒன்றுதான்.

இந்தச் சட்ட நீடிப்பு ஏற்பட்டால், ஆங்கிலத்தை அந்த மக்கள்மீது கட்டாயமாகத் திணிப்பதாகும் என்பது, எதிர்ப்புக்குச் சொல்லும் காரணங்களில் ஒன்று.

ஆனால், '1954-லிருந்து மக்கள், இந்த மாற்றத்திற்குத் தங்களை தயாராக்கிக் கொண்டார்கள்' என்பதுதான் இந்த அவையில் நான் வைக்கும் கருத்தாகும்.

எந்த நாட்டிலும்—எந்தக் காலத்திலும் இந்தகைய மாற்றம், சில பல இடையூறுகளுடன்தான் நடைபெறும். இடையூறுகளின்றி இந்தப் பணி நடைபெற முடியாது.

டையூ, டாமன் பகுதிகளில் போர்ச்சுகீசியச் சட்டம் அமுலில் இருந்தது. அங்கு ஆங்கிலச் சட்டம் அமுலாக்கப்பட்டபொழுது, அவர்களும் தொல்லையுற்றனர்; ஆனால் அத்தொல்லைகள் சமாளிக்கப்பட்டுவிட்டன.

அதுபோலவே இங்கு இச்சட்டங்கள் அமுலாக்கப்படுவதால், ஏதேனும் ஒரு பகுதியினருக்குச் சிரமம் ஏற்படக்கூடும். ஒரு சட்டத்தை, 'கூடாது' என வாதிடுவதற்கு இதுவே [illegible]ரணமாகாது.

'சிரமம்' என்பது சட்டங்கள் அமுலாக்கப்பட்ட பிறகே உணரக்கூடிய ஒன்றாகும். இந்த 96 சட்டங்களும் ஒரே நேரத்தில் ஒருவர்மீது அமுலாக்கப்படுவதில்லை; வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு நபர்களின் மீது அமுலாக்கப்படும். அதனால் இந்தச் சட்டங்கள் அமுலாக்கப்பட்ட பிறகுதான் சிரமம் உள்ளதென்பது தெரியும். அதன்பிறகு அவைகளை நிவர்த்திக்கும் முறைகளும் புரியும்.

தேசிய ஒற்றுமைக்கு இந்தச் சட்ட நீடிப்பு பயன்படும். நாம் 'தேசிய ஒற்றுமை வேண்டும்' என்கிறோம்; அதுவும், 'வாழ்க்கையில் எல்லா முறைகளிலும் வேண்டும்' என்கிறோம்.

ஆனால், புதுவை மாநிலத்தைத் தனியாக விடுத்து, அவர்களை அந்நியச் சட்டங்களை அனுசரிக்க அனுமதித்துவிட்டால், தேசிய ஒற்றுமைக்கு வழி ஏற்படாது!

ஒருமைப்பாடு, தேசிய ஒற்றுமைக்கு முதற்படி—முக்கியமான நுழைவு வாயில்! சட்டங்களில் ஒருமைப்பாடு—தேசிய ஒருமைப்பாட்டிற்கு நிச்சயம் வழிவகுக்கும் இந்த வகையிலும் இந்தச் சட்டத்தை வரவேற்கவேண்டும்.

புதுவையில் குறைந்தது 20 வழக்கறிஞர்கள் இருக்கின்றனர். அந்தப் பகுதியிலிருந்து வருபவன் என்பதால், அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களில் 5 வழக்கறிஞர்களே தொழில் நடத்துபவர்கள்; அவர்களும் வயது முதிர்ந்தவர்கள், அவர்களும் ஒரு நாள் ஓய்வு பெற்று இளைஞர்களுக்கு இடங்கொடுத்து விடுவார்கள். நானும் தொழில் நடத்தும் வழக்கறிஞன்; புதுவையிலிருந்து 13 மைலில் உள்ள கடலூரில் எனக்கு வழக்குகள் உண்டு.

பிரெஞ்சிலிருந்து ஆங்கில மற்றம், இந்தச் சட்டங்கள் அமுலாக்கப்பட்ட பிறகே வரும். சிலர், 'எங்களுக்குப் பிரெஞ்சும் தமிழுமே தெரியும்' எனச் சொல்லக்கூடும். இந்நிலை, புதுவைக்கு மட்டும் பொருத்தமில்லை; எல்லா மாநிலங்களுக்கும் இதே நிலைதான்.

ஆங்கிலத்தின் இடத்தை வட்டார மொழி பிடிக்கும் நிலை வந்தால், அது, புதுவையிலும் சாத்தியமாகும்.

ஆகவே, இந்தச் சட்ட நீடிப்புக்கு எதிர்ப்பு என்பதே இல்லை; பெரும் ஆதரவு இருந்துவருகிறது.

இது, நீண்ட நாள் எதிர்பார்த்த சட்டமாகும். இச்சட்டத்தைக் கொண்டுவராமலிருந்ததற்காகப் புதுவை மக்கள், ஆட்சியாளர்கள்மீது குற்றஞ்சொல்லி வருகின்றனர். ஆகவே, இந்தச் சட்டத்திற்கு முழு ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்து[illegible] சிறு யோசனை ஒன்றையும் [illegible]க்கொள்ள விரும்புகிறே[illegible]. இம்மாநிலத்தின் நான்கு பகுதிகளும்—ஒவ்வொன்றும்—ஒவ்வொரு மாநிலத்துடன் ஒட்டியிருக்கின்றன. புதுவை தமிழகத்துடனும், மற்றொரு பகுதி கேரளத்துடனும், வேறொரு பகுதி ஆந்திரத்துடனும் ஒட்டியிருக்கின்றன. இவை சேர்ந்ததுதான் புதுவை மாநிலம் என்கிறார்கள்.

இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒருநாள் புதுவை மாநிலம், அண்டை மாநிலத்துடன் இணைக்கப்படவே ஆகவேண்டும். அது ஒன்றுதான், சொல்லப்படும் தொல்லைகள் நீங்க உரிய பரிகாரமாகும். இந்த மாற்றமும் மெதுவாகவும், அதிகக் கால இடையீட்டுடனும் நடைபெறவேண்டும்.

வழக்குமன்றங்கள் மொழி தமிழாக வேண்டும் என்பதும் என்னுடைய ஆலோசனைகளில் ஒன்றாகும்."

பள்ளி இறுதியாண்டு தேர்வு முடிவுகள்

அமைச்சர் தரும் தகவல்

சென்னை, மே 27—

"பள்ளி இறுதியாண்டு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்வு முடிவுகள் ஜுன் 1-ம் நாளன்று வெளியாகக்கூடும்.

"புகுமுக வகுப்பு (பி.யு.சி) தேர்வு முடிவுகள் ஜுன் மத்தியில் வெளியாகக்கூடும்"

என்று கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"ஜுன்—ஜுலைத் திங்களில் தமிழகத்தில் 8 அல்லது 9 புதிய கல்லூரிகள் திறக்கப்படவிருப்பதால், புகுமுக வகுப்பில் 'ஷிப்டு' முறை அமுலுக்குக் கொண்டுவரப்படமாட்டாது."

கண்ணிழந்தோருக்கு வேலைவாய்ப்பு

கிண்டியில் தொழிற் பயிற்சி

சென்னை, மே 28—

தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 20—25 வயதுக் குருடர்களுக்குக் கிண்டியில் உள்ள தொழிற்பேட்டையில் இலகு பொறியியல் தொழிற்சாலையில் இப்போது ஐந்து வாரப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

கடைசல் பொறி, அச்சு இயந்திரங்கள் போன்று மின்விசையால் இயங்கும் இயந்திரங்களில் குருடர்களுக்குப் பயிற்சி தருவது என்று தமிழக அரசு சென்ற ஆண்டு தொடங்கிய மூன்றாண்டுத் திட்டம் ஒன்றில் அவர்கள் பங்கெடுத்து வருகின்றனர்.

அமெரிக்க மறுவாழ்வு ஊழிய அமைப்பு பி.எல்.-480 நிதியிலிருந்து இத்திட்டத்திற்காக ரூ. 2½ இலட்சம் அளித்துள்ளது.

இப்பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே கைத்தொழில் கற்றிருக்கின்றனர்; அவர்களுக்கு, இயந்திரங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைத் தேர்ச்சியடைந்த ஆசிரியர்கள் கற்றுத் தருவார்கள்.

பயிற்சிக்குப்பிறகு அவர்கள், பல்வேறு தொழிற்சாலைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

பயிற்சியாளர் தங்கும் விடுதியைத் தமிழக அரசு நடத்துகிறது.

"குருடர்களுக்கு இதற்கு முன்னர் நூல் நூற்றல், நெசவு, பாய் முடைதல், மெழுகு செய்தல் போன்ற தொழில்கள் கற்றுத் தரப்பட்டன; இவை அவர்களுக்குப் போதிய வேலைவாய்ப்புக்களை அளிக்கவில்லை; அப்படியே அவை கிடைத்தாலும் சம்பளம் குறைவாயிருந்தது.

இந்தப் புதிய முயற்சியினால் குருடர்களுக்கு நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும்.

நகராட்சிகளின் ஆயுட்காலம்

தமிழக அரசு உத்தரவு

கோவை, மே 27—

தமிழகத்திலுள்ள நகராட்சிகளின் ஆயுட்காலத்தை அக். 5-ம் நாள் வரையில் நீடித்து அரசு உத்தரவிட்டிருக்கிறது.

தற்போதுள்ள நகராட்சிகளின் ஆயுட்காலம் இவ்வாண்டு ஜுன் 20-ல் முடிவடைகிறது

"நிர்வாக நிலைமைகளினால், ஜுன் 20-ம் நாளுக்கு முன்பாக நகராட்சித் தேர்தலை நடத்துவது இயலக்கூடிய ஒன்றல்ல" என்று அரசு உத்தரவு கூறுகிறது.

உலக 'சராசரி' அளவையும் எட்டவில்லை

தொலைபேசி வசதியில் இந்தியாவின் நிலை

புதுடில்லி, மே 28—

இந்தியாவில் 1000 பேருக்கு 2 டெலிபோன்கள் வீதம் உள்ளன.

உலகம் முழுவதிலும் கணக்கெடுத்துப் பார்த்தால், 100 பேருக்கு 6.5 டெலிபோன் வீதம் இருந்து வருகிறது.

உலகில் மொத்தம் 22 கோடி டெலிபோன்கள் உள்ளன; ஆனால் இந்தியாவில் இப்போதுதான் 10 இலட்சம் எல்லையைத் தாண்டியிருக்கிறது.

உலகில் உள்ள டெலிபோன்களில் பாதி அமெரிக்காவிலும், கனடாவிலும் உள்ளன; அங்கு 100 பேருக்கு 50 டெலிபோன்கள் வீதம் இருக்கின்றன.

சுவீடன், சுவிட்சர்லாந்து, நியூஜிலாந்து போன்ற நாடுகளிலும் 100 பேருக்கு 36 முதல் 45 டெலிபோன்வரை உள்ளன.

இந்தியாவில் முக்கிய நகரங்களில் உள்ள டெலிபோன்களின் எண்ணிக்கை கீழே தரப்படு

கல்கத்தா 97,303; பம்பாய் 90,949; டில்லி 61,256; தமிழகம் 38,528; ஐதராபாத் 19,602; பெங்களூர் 13,530; ஆமதாபாத் 10,635.

மகாராட்டிரம், வங்கம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றிலும், நாட்டிலுள்ள மொத்த டெலிபோன்களில் 10-ல் 1 பங்குக்கு மேல் உள்ளன. விவரம் கீழே தரப்படுகிறது:—

மகாராட்டிரம் 1,33,853; வங்கம் 1,13,476; தமிழகம் 79,965; உ. பி. 62,839; டில்லி 61,256; ஆந்திரம் 49,722; மைசூர் 35,767; கேரளம் 29,117; பீகார் 28,040; ம. பி. 24,484; பஞ்சாப் 22,224.

மற்ற மாநிலங்களில் 10,000-க்கும் குறைவாக உள்ளன. நேபாவில்தான் மிகக் குறைவு; அதாவது 176-தான்.

புழக்கத்திலிருந்து நீக்கப்பட்ட நாணயங்கள்

மத்திய அரசு விளக்கம்

புதுடில்லி, மே 25—

வெள்ளி உட்பட நான்கு உலோகங்களின் கலவையினால் செய்யப்பட்ட ஒரு ரூபாய்—அரை ரூபாய்—கால் ரூபாய் நாணயங்கள், அண்மையில் புழக்கத்திலிருந்து நீக்கப்பட்டன.

ஆனால், இந்த நாணயங்களுக்கும்—சட்டப்படி செல்லுபடியாகும் இவைபோன்ற நிக்கல் நாணயங்களுக்குமிடையே சிறிய குழப்பம் இருப்பதாய் தெரியவந்திருக்கிறது.

இதைபடுத்து, மத்திய நிதித்துறை, செய்தித்துறை, செய்திக் குறிப்பு ஒன்றில் நிலைமையை விளக்கிக் கூறியிருக்கிறது:—

'நான்கு உலோகக் கலவையினால் செய்யப்பட்ட ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள் 1946-ஆம் ஆண்டு மத்திவரையில் வெளிவந்தவைபாகும். இவற்றின் ஒரு பக்கத்தில் மன்னரின் உருவமும்-மறு பக்கத்தில் ஒரு மலரும் பொறிக்கப்பட்டிருந்தன.

இந்த நாணயங்கள், சட்டப்படி செல்லுபடியாகமாட்டா; என்றாலும், அரசு அலுவல்களை நடத்தும் இந்திய ரிசர்வ் பாங்கி அலுவலகங்களிலும், அதன் ஏஜென்சிகளிலும், துணை ஏஜென்சிகளிலும், அரசாங்கக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தபால்—தந்தி இலாகா, இரயில்வே அலுவலகங்கள் ஆகியவற்றிலும், இந்த ஆண்டு செப்டம்பர் 30-ஆம் நாள்வரை கொடுக்கலாம்.

மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில், ரிசர்வ் பாங்கியின் பண விநியோக நிலையங்களில் இவை செல்லுபடியாகும்.

1946—க்குப் பிறகு வெளிவந்துள்ள—நிக்கல் உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு ரூபாய்—கால் ரூபாய் நாணயங்கள் சட்டப்படி செல்லுபடியாகும்: இவற்றை எவரும் ஏற்கத்தான் வேண்டும்.

ஒரு பக்கம் மன்னரின் உருவமும், மறுபக்கம் புலியின் உருவமும் பொறிக்கப்பட்ட நாணயங்களும், அசோகா ஸ்தூபி—நேருவின் உருவம் ஆகியவை பொறிக்கப்பட்ட நாணயங்களும் செல்லுபடியாகும்.

இந்தியாவுக்கு வந்த உல்லாசப் பயணிகள்

ஒரு புள்ளிவிவரம்

இந்தியாவுக்கு 1967-ல் வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு புதிய உச்ச அளவாகும். இவர்களில் அமெரிக்கர்கள்தான் மிக அதிகம்: 43,000 பேருக்கு மேல் வந்தனர்.

சென்ற ஆண்டு 1,79,000 உல்லாசப் பயணிகள் வந்தனர் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது. 1966-ம் ஆண்டுத் தொகையை விட இது 12½ சதவிகிதம் அதிகம்.

அமெரிக்கருக்கு அடுத்தபடி பிரிட்டிஷார்—27,000 பேர் வந்தனர். இலங்கையருக்கு மூன்றாவது இடம்—20,000 பேர் வந்தனர்.

கழகத் தேர்தல்கள்

சென்னை மாவட்டத்தின்
வட்டத் (டிவிஷன்) தேர்தல்கள்
ஜூன் 1, 2 ஆகிய நாட்களில்

புதிதாக விரிவாக்கப்பட்ட 120 வட்டங் (டிவிஷன்)களின் அடிப்படையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி மு.க.)

****

ரூ. 65 கோடித் திட்டத்தில் ஆரம்பத்திலேயே கோளாறு

ஆறுயிரம் தொழிலாளர்கள் உழைப்பும் எட்டு கோடி அமெரிக்க டாலர் உதவியும் கண்ட பலன் இதுதானு?

ஆமதாபாத், மே 28—

அக்டோபரில் விசை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப் பட்ட தாராப்பூர் அணுவிசை நிலையத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ரூ. 65-கோடி செலவில் அத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

விசை நிலையத்தின் இரு அழுத்தக் கலன்களில் ஒன்றில் விரிசல் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அது சரியாக இருந்தால்தான் அணு எரி பொருளைப் பயன்படுத்தமுடியும்.

இரு அழுத்தக் கலன்களில் ஒன்று நன்கு செயல்படாவிட்டால்கூட நிலையத்தை இயக்க முடியாது.

அமெரிக்க அரசிடமிருந்து எட்டுக் கோடி டாலர் கடன் பெற்று நிறைவேற்றப்படும் இந்தத் திட்டம், இன்னும் ஓராண்டுக் காலத்துக்காவது மகாராட்டிரம்—மைசூருக்கு விசை அளிக்கமுடியாது.

இந்த நிலையத்தை நிறுவ சுமார் 6,000 தொழிலாளர்கள் பயன் படுத்தப்பட்டனர்!

4 இலட்சம் கிலோவாட் விசை உற்பத்தி செய்யப்படும் வகையில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது.

திட்டம் ஆரம்பமாவதில் கால தாமதம் ஏற்படுவதால் கோடிக் கணக்கில் நட்டம் ஏற்படும். ஏனென்றுல், முதல் தடவையாக உற்பத்தி செய்யப்படும் அணு விசை விரைவில் கிடைக்கும் என்ற கருத்தில் இரு மாநிலங்களின் விசைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியால் இயலவில்லை!

பாட்ன, மே 28—

இந்தி வழங்கும் மாநிலம் என்று சொல்லப்படும் பீகார் மாநிலத்திலேயே இந்தியை முழுக்க முழுக்க ஆட்சிமொழியாக்குவதில் பல சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன!

"அரசு நிர்வாகத் அலுவல்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் என்று வரையறுத்துக் கூற இயலாது"

என்று பீகார் சட்டமன்றத்தில் நிதியமைச்சர் கிருஷ்ண சாந்த் சிங் கில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

ஆங்கிலத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்ய அரசு உத்தேசித்திருப்பதாகவும் அவர் ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

சென்னை மாநகராட்சிப் பள்ளித் திறப்புவிழா

சென்னை 13-வது வட்டம் வெங்கட ஐயர் தெருவிலுள்ள துவக்கப் பள்ளியின் புதிய சட்டிடத்தைக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார்கள்; இந்த விழா, 29—5—68 மாலை 5-மணிக்கு, மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் அவர்கள் தலைமையிலும் — திரு. வி. முனுசாமி முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு: அ. செல்வராசன் எம்.சி.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30--5--68

திண்டிவனம்

நகர தி.மு.க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-30 மணிக்கு வ. உ. சி. திடலில்; தலைவர்: டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்., எம்.சி.; பாராட்டுப் பெறுவோர்: ப. உ. சண்முகம் எம்.எல்.சி., இரா. சாம்பசிவம் எம்.எல்.சி.; பாராட்டிதழ் வாசிப்பவர்: ப. இராமானுசம்; பாராட்டுரை வழங்குவோர்: அமைச்சர் மு. கருணநிதி, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., டி. டி. இராமபத்திரன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ. ஜி. பாலகிருட்டிணன், எஸ். பச்சையப்பன், டி. கேசவலு, ஆர். ஆர். முனுசாமி, வி. முனுசாமி, வழக்கறிஞர்கள் பி. மேகநாதன், இராமகிருட்டினன், கே. பாண்டுரங்கன், மற்றும் வி. சுப்பிரமணியம், ஆ. தங்கவேலு, எஸ். நடராசன், எஸ். பக்கிரி, வ. துரை, கே. செயராமன், வி. செல்வராசு, எஸ். விசயராகவன், மற்றும் பலர். (மாலை 6-மணிக்கு ஓ.பி.ஆர். பூங்காவிலிருந்து ஊர்வலம் புறப்படும்).

சென்னை 96-வது வட்டம்

கலைஞர் பொதுப்பணி மன்றச் சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 7 மணிக்கு புதூர்—அசோகா நகரில்; பாராட்டுப் பெறுவோர்: டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., அலமேலு அப்பாதுரை எம்.எல்.சி.; தலைவர்: ஆர்.பி. வீரப்பன்; பாராட்டு வழங்குவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், துணை மேயர் சி. பி. பவளவண்ணன், எம். கோபால் எம்.எல்.ஏ., சைதை சம்பந்தம் எம்.சி., எம். குமார், ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., மு. மாசிலாமணி, எம். இந்திரா, கோ. அய்யாவு, மு. முருகேசன்.

பேரணம்பட்டு

நகர தி. மு. க. சார்பில் மாலை 6 மணிசகு பேருந்து நிலையத்தில்; தலைவர்: அன்வர்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல் ஏ., பி. செயராமன், பி. கே. முனுசாமி, பெ. க. முனிரத்தினம்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படி அரிசிக்கு என நிதி ஒதுக்கிடும் நிலையில்—

★ விநியோகம் வேகுவாகச் சீரடைந்துள்ள நிலையில்—

★ உற்பத்தி திருப்தியளிக்கும் வகையில் உயர்ந்துவரும் நிலையில் —

★ நகரங்களிலோ, கிராமங்களிலோ, அன்றுட உணவுக்கான அரிசியைப் பெறுவது ஒரு பிரச்சினையாக இல்லாமல் எளிதான காரியமாக இருக்கும் நிலையில்—

படி அரிசித் திட்டத்தை தமிழகம் முழுவதிலும் விரிவுபடுத்தக் கோரி ஏன் போராட்டக் குரல் கொடுத்திருக்கிருர்கள் என்பது, புலப்படாத புதிரல்ல! அது, 'அப்பட்டமான அரசியல் பிழைப்பு' என்பதன்றி வேறில்லை!

படி அரிசியும் போடமுடியாதவர்கள், படி அரிசி கேட்டுப் போராடுவதற்குத் தார்மீக உரிமையற்றவர்களாகிருர்கள்!

வேண்டுமானுல், 'நாங்கள் 1972-ல் ஆட்சியில் அமர்த்தப்பட்டால், படி அரிசியைத் தமிழகம் முழுவதும் போடுவோம்' என்று பேசுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

பிரிந்து கொண்டிருக்கும் உயிரை நெஞ்சில் ஈரமில்லாமல் பார்த்துக்கொண்டு சென்றவன், போன உயிரைத் தடுத்து நிறுத்தி உதவியளித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து, 'பிழைத்தவனை எப்போது பிரபுவாக ஆக்கப்போகிருய்?' என்று கேட்பது போல் இருக்கிறது—காங்கிரசின் போராட்ட மனப்பான்மை!

போராடத்தான் வேண்டுமென்றுல், இளைஞர் காங்கிரசுக்குப் பிரச்சினைகளா இல்லை! நிறைய இருக்கிறதே—அவர்கள் கட்சிக்குள்ளாகவே!

★ 'சோஷலிசத் தத்துவம் கொண்ட பத்து அம்சத் திட்டங்களை ஏன் அமுல்படுத்தவில்லை' என்று போராடலாம்!

★ 'மதுவிலக்கு ஏன் எல்லா மாநிலங்களிலும் இல்லை' என்று போராடலாம்!

★ 'அந்நியன் அபகரித்த பூமி ஏன் இன்னும் மீட்கப்படவில்லை' என்று போராடலாம்!

★ 'தமிழகத்துக்கு உரிய திட்டங்களைத் தந்து உதவுவதில் விரைவு காட்டுங்கள்' என்று போராடலாம்!

இப்படி—இத்தனைப் பிரச்சினைகளும் தங்கள் கட்சி ஆளும் மத்திய அரசிடம் இருக்கும்போது—காங்கிரசு ஆண்டபோது கிடைக்காத படி அரிசித் திட்டத்தை, இப்போது இந்த அளவுக்கேனும் அமுலாக்கிவரும் கழக அரசை எதிர்த்துப் போராடப் புறப்பட்டிருக்கிருர்கள்—இளைஞர் காங்கிரசுக்காரர்கள்!

'அரிசி'யல், அரசியலுக்கு வரலாம்! அரசியல், 'அரிசி'யலுக்குப் போக வேண்டாம்!

'பிழைப்பு'க்காக, இல்லாத ஒன்றைப் பிரச்சினையாக ஆக்க வேண்டாம்! இருக்கின்ற பிழைப்பும் போய்விடும்!

புரிந்துகொள்வார்களா—இளைஞர் காங்கிரசார்!

செங்கற்பட்டு மாவட்டம்

ஆலந்தூர் நகரம்

50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் எண்ணிக்கை கொண்ட நகரமாக அறிவிக்கப்படுவதால், அது கழகச் சட்ட திட்டம் விதி 7 பிரிவு 5-ன் படி உட்கிளை அமைத்துக் கொள்ளவும், விதி 7 பிரிவு 9, 10, 11 ஆகியவைகளின்படி பெருநகரக் கிளை அமைத்துக் கொள்ளவும் தகுதிபடைத்த பெருநகரமாக இதன் மூலம் அறிவிக்கட்படுகிறது.

இதன்படி ஆலந்தூர் நகரத்தின் வார்டுகளில் உட்கிளைகள் அமைப்புத் தேர்தல்கள் 4 6 68 அன்று நடைபெறுவதற்குத் தலைமைக் கழகத்தின் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

'அறிவகம்'
சென்னை-13
27—5—68 } —தலைமைக் கழகம் (தி மு.க.)

பிரெஞ்சு அரசின் முயற்சியின் விளைவு

மூன்று தொழிற்சாலைகளின் தொழிலாளர்கள் முடிவு

பாரிஸ், மே 27—

பிரான்சில் வேலை நிறுத்தம் செய்துவரும் 80-இலட்சம் தொழிலாளர்களின் குறைகளைப் போக்குவதற்காக அரசு பல பெரிய சலுகைகளை வழங்க மு[illegible]த்து; இந்த ஆண்டில், 1[illegible]கித ஊதிய உயர்வு அளிப்பது அதில் ஒன்ருகும்.

ஆனுல் பிரான்சிலேயே மிகப் பெரியதான மூன்று தொழிற்சாலைகளின் ஊழியர்கள், இந்தச் சலுகையை நிராகரித்துவிட்டனர். வேலைநிறுத்தத்தை நீடிப்பதென முடிவு செய்துள்ளனர்.

தொழிற்சங்கங்கள் — நிர்வாகிகள்—அரசு ஆகிய முத்தரப்பினருக்குமிடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக தலைமையமைச்சர் பாம்பீடு அறிவித்தார்; ஆனுல் தொழிலாளர்கள், இந்த உடன்பாட்டைப்பற்றி மிகவும் அதிருப்தியடைந்துள்ளனர்.

பொன்மலை ஜி. பராங்குசம்

சுற்றுப்பயணம்

மே 28: மதுரை; 29: செந்தாரப்பட்டி (சேலம் மாவட்டம்); 30: சுப்பிரமணியபுரம் (திருச்சி); ஜூன் 1: ஷோரனூர் (கேரளம்); 2: பழனி.

லூதர்கிங்குக்கு நேரு நினைவுப் பரிசு

விருதைப் பெற இந்தியாவுக்கு வருகிருர் திருமதி கிங்

புதுடில்லி, மே 27—

மறைந்த தலைமையமைச்சர் நேருவின் நினைவாக அமைக்கப்பட்டிருக்கும் நேரு நினைவுப் பரிசு, சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க நீக்ரோ தலைவரான மார்ட்டின் லூதர் கிங்குக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ 1 இலட்சம் ரொக்கமாகவும், பாராட்டு இதழும் பரிசாக வழங்கப்படும். இப்பரிசுத் தொகையை அந்நியச் செலாவணியில் மாற்றிக் கொள்ளலாம்.

பரிசைப் பெறுவதற்காக மறைந்த நீக்ரோ தலைவருடைய மனைவி திருமதி கிங் இந்தியா வருமாறு அழைக்கப்பட்டிருக்கிருர்.

பரிசளிப்பு விழா நவம்பரில் டில்லியில் நடைபெறும்.

உலக மக்களிடம் இணக்கம் ஏற்படுத்துகிற தலைவருக்கு நேரு நினைவுப் பரிசு வழங்கப்பட்டுவருகிறது.

நினைவுப் பரிசு வழங்கப்படுவதற்காக உலக முழுவதிலிருந்தும் பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன; அவற்றுள், மார்ட்டின் லூதர் கிங்கின் பெயரையே நினைவு நிதியின் நடுவர்கள் தேர்ந்தெடுத்தனர்.

நேரு நினைவுப் பரிசுக்கு, டாக்டர் கிங்கின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

"பரிசைப் பெறுவதற்கு டாக்டர் கிங் நம்மிடையே இன்று இல்லை; எனினும், இப்பரிசுக்கு அவரே உரியவர்"

என்று, திரிகுண சென் அறிவித்தார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி சென்னை திரும்பினுர்

அண்ணவுடன் சந்திப்பு

சென்னை, மே 28—

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் கடந்த ஒரு மாத காலமாக ஏதென்ஸ், பிரான்சு, அயர்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, மாஸ்கோ வழியாக விமானமூலம் நேற்று காலை பம்பாய் வந்து சேர்ந்தார்.

அங்கிருந்து அவர், விமான மூலம் நேற்றுமாலை சென்னை வந்து சேர்ந்தார்.

பின்னர் அவர், முதலமைச்சர் அண்ண அவர்களைச் சந்தித்து, சுற்றுப்பயண அனுபவங்களையும், பிற நிலைமைகளையும் விளக்கிக் கூறினுர்.

வேளாண்மை அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

உடல் நிலை

முதலமைச்சர் அண்ண சந்தித்து நலம் விசாரித்தார்

சென்னை, மே 27—

முதலமைச்சர் அண்ண அவர்கள், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களைக் கண்டு நலம் விசாரித்தார்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்களின் உடல்நிலை நன்கு தேறிவருகிறது; இன்னும் பத்து நாட்களுக்குமேல் மருத்துவமனையிலேயே தங்கி ஓய்வு பெறவேண்டும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் கழகச் சட்டமன்ற உறுப்பினர் டி. ஆர். இராசரத்தினத்தையும் அறிஞர் அண்ண அவர்கள் கண்டு நலம் விசாரித்தார்.

காங்கிரசு மாநகராட்சி மன்ற குழுத் தலைவர் விநாயகமூர்த்தியையும் அண்ண பார்த்தார்.

அறிஞர் அண்ண அவர்களுடன் இரா. செழியன் எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல் ஏ, ஆகியோரும் வந்திருந்தனர்.

மருத்துவமனையில் இளமுருகு பொற்செல்வி

உடல்நலம் விசாரித்தார் முதலமைச்சர் அண்ண

சென்னை, மே 27—

கார் விபத்தில் காயமடைந்து சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் தோழர் இளமுருகு பொற்செல்வியை முதலமைச்சர் அண்ண அவர்கள் சந்தித்து உடல் நலம் பற்றி விசாரித்தார்.

தோழர் இளமுருகு அவர்களை இரா. செழியன் எம்.பி., மாயவன் எம்.பி., து ப. அழகமுத்து எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல் ஏ., காஞ்சி நகராட்சித் தலைவர் தங்கவேலர், ம. பொ. சிவஞானம எம்.எல்.ஏ., தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெருமாள் முதலியார், இணை இயக்குநர் வெங்கடசுப்பிரமணியம், [illegible] முத்துகிருஷ் [illegible] தோழர்கள் ;ம[illegible] னம், ஆறுமுகம், [illegible] யோரும் உடல்நல[illegible] தனர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.